**செ.வெ. எண்: 362** **நாள்: 22.06.2012**

## தமிழ் வளர்ச்சி இயக்ககம் – செய்திக் குறிப்பு
## தமிழ் வளர்ச்சி அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

*******

நாள்: 22.6.2012

**சென்னை, எழும்பூர், ஆல்சு சாலை, தமிழ் வளர்ச்சி இயக்ககத்தில் நடைபெற்ற தமிழ் வளர்ச்சி அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டம் தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலாளர் முனைவர் மூ.இராசாராம், இ.ஆ.ப. அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற போது பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை.**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ் வளர்ச்சிக்கும், தமிழ் மொழிக்கும் எந்தளவு முக்கியத்துவம் கொடுத்து இருப்பதை சட்டமன்ற கூட்டத் தொடரில் அறிவித்த அனைத்து அறிவிப்பும் பறைசாற்றும்.

தமிழ் வளர்ச்சித் துறைக்கு எல்லா துறைகளைக் காட்டிலும் ஒரு சிறப்பு உண்டு. ஒரு முதிர்ச்சிப் பெற்றத் துறை, எல்லா துறைகளுக்கும் வழிகாட்டியான துறை ஆகும்.

இத்துறையில் இருக்கிறவர்கள் குறிப்பாகத் தமிழ் அறிவும், தமிழ் உணர்வும் பெற்றிருக்க வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அரசின் திட்டங்கள் சரியான முறையில் நிறைவேற்ற தமிழ் வளர்ச்சி அலுவலர்கள் பாடுபட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய தமிழ் வளர்ச்சித்துறை செயலாளர் அவர்கள் தமிழ் வளர்ச்சிப் பணிகளில் மிகவும் அக்கறையுடன் செயற்பட்டு வருகிறார். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்தில் பேசி தமிழ் வளர்ச்சித் துறைக்காக நிறையத் திட்டங்களை கேட்டுப்பெற்று வருகிறார். தமிழ் வளர்ச்சி அலுவலர்கள் இன்னும் சரியாக செயற்பட வேண்டும் என்று ஆரம்பத்திலேயே பேசினார்கள். ஒவ்வொருவரும் ஒரு மனநிலையில் இருக்கிறீர்கள். உங்களுடைய மனநிலையை மாற்றிக் கொண்டு அரசு செயற்படுத்துகிற தமிழ் வளர்ச்சிப் பணியில் உங்களை இணைத்துக் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

உங்களுடைய தமிழ் வளர்ச்சிப் பணிகளைப் புரிந்துக்கொள்ள வேண்டும். சோர்வுக் கூடாது, சிறப்பாக செயற்பட வேண்டும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ் வளர்ச்சித்துறையின் பணிகளுக்கு கேட்டதையெல்லாம் இன்றைய தினம் கொடுத்து வருகிறார். அவர்களின் திட்டச் செயற்பாடுகளுக்கு ஆக்கத்தையும் ஊக்கத்தையும் தமிழ் வளர்ச்சித்துறை அலுவலர்கள் அளிக்க வேண்டும்.

தமிழ் வளர்ச்சித் துறை மிகவும் சிறப்பான துறையாகும். தமிழ் வளர்ச்சித் துறையின் ஆணைகளையும், ஆலோசனைகளையும், திட்டங்களையும், தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர்கள் மாவட்டங்களிலும், தலைமையிடத்திலும் சிறப்பாகச் செயற்படுத்த வேண்டும். இந்தத் துறை எந்தெந்த மாவட்டத்தில் இருக்கிறது என்பது நிறைய பேருக்குத் தெரியாது. தெரியும் அளவிற்கு உங்களுடைய செயற்பாடுகள் அமைய வேண்டும். அரசு ஊழியர், ஆளும் அரசின் ஊழியர். மாவட்ட ஆட்சியர் ஒத்துழைப்புடன் ஒரு செய்தியாளர் கூட்டம் தமிழ் வளர்ச்சித்துறை அலுவலர்களால் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட வேண்டும். தமிழ் வளர்ச்சித் துறையின்

திட்டங்கள், சாதனைகள், அறிவிப்புகள் விளக்கும் தகவல் பலகைகள் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் உடனடியாக வைக்கப்பட வேண்டும்.

உலத் தமிழச் சங்கம் அமைக்கும் பணிகள் உடனடியாக முடிக்கப்பட வேண்டும்.

பள்ளிக்கல்வித் துறை 15,000 கோடி ஒதுக்கி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சாதனை படைத்துள்ளார். தமிழ் வளர்ச்சித் துறையும் உண்மையான வளர்ச்சித் துறையாக இருக்க வேண்டும் என்பதற்காக இந்த ஓராண்டில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ் வளர்ச்சிக்காக ரூ.8 கோடி 40 இலட்சம் ஒதுக்கி, தமிழ் வளர்ச்சித்துறை வரலாற்றில் சாதனைப் படைத்துள்ளார். தமிழ் வளர்ச்சி அலுவலர்கள் அவர்தம் எண்ணங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் செயற்பாடுகளில் செலுத்த வேண்டும். மேலும் வளர்ந்துவரும் இன்றையத் தமிழுக்கு உண்மையான வளர்ச்சித் தேவை. அந்த வளர்ச்சியை சீரான பாதையில் கொண்டு செல்ல வேண்டும். தமிழ் வளர்ச்சித் துறை செயலாளர் அவர்கள் எடுத்துச் சொன்ன அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் அலுவலர்கள் ஏற்று செயல்பட வேண்டும் என்றார்.

ஆய்வுக் கூட்டத்திற்கு தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலாளர் முனைவர் மூ. இராசாராம், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் கா.மு.சேகர், தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் முனைவர் கோ. விசயராகவன், மொழிபெயர்ப்பு இயக்குநர் முனைவர் ந.அருள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**